


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி


NAMADHU DHINA KANI www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 279 | 4 Pages | 7.5.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 279 | 4 பக்கங்கள் | 7.5.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**அளவின்கண் நின்றொழுக லாற்றார் களவின்கண்**
**கன்றிய காத லவர்**

**விளக்கம்: களவு செய்து பிறர் பொருள் கொள்ளுதலில் மிக்க விருப்பம் உடையவர், அளவு (சிக்கனம்) போற்றி வாழும் நெறியில் நின்று ஒழுக மாட்டார்.**

## பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா அதிரடி தாக்குதல்



டெல்லி, மே.7

ஜம்மு காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காமில் உள்ள சுற்றுலா தலத்தில் கடந்த 22ம் தேதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் சுற்றுலா பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானை தலைமையிடமாக கொண்ட லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின்கிளைஅமைப்பானதிரெசிஸ்டண்ட்பிரண்ட்பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்த தாக்குதலை தொடர்ந்து இந்தியா , பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் உருவாகியுள்ளது. அதேவேளை, பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்று பிரதமர் மோடி, பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங் உள்பட பலரும் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா இன்று அதிரடி தாக்குதல் நடத்தியுள்ளது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 'ஆபரேஷன் சிந்தூர்' என்று பெயரிடப்பட்ட இந்த தாக்குதல் நடவடிக்கையின்போது எல்லையில் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்கள் மீது துல்லிய தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் உயிரிழப்பு ஏற்பட்டதா? தாக்குதலில் ஏற்பட்ட பாதிப்பு குறித்த விவரம் இதுவரை வெளியாகவில்லை.

இந்த தாக்குதல் நடவடிக்கையின்போது பாகிஸ்தான் ராணுவ கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை என தகவல் வெளியாகியுள்ளது. ஆபரேஷன் சிந்தூர் குறித்து இன்று காலை மத்திய அரசு அல்லது பாதுகாப்புப்படை தரப்பில் விளக்கம் அளிக்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

## திருமண நிகழ்ச்சியில் சப்பாத்தி பரிமாறுவதில் தகராறு; 2 பேர் அடித்துக்கொலை




லக்னோ, மே.7

உத்தரபிரதேச மாநிலம் அமேதி மாவட்டம் சராய் ஹிர்டே ஷா கிராமம் உள்ளது. இந்த கிராமத்தில் கடந்த 3ம் தேதி இரவு திருமண நிகழ்ச்சி நடைபெற்றது.

திருமண நிகழ்ச்சியில் விருந்து பரிமாறப்பட்டது. அப்போது, மணமகள் உறவினர்களான ரவி (வயது 18), ஆஷிஷ் (வயது 17) மற்றும் மணமகன் உறவினர்கள் இடையே சப்பாத்தி பரிமாறுவதில் தகராறு ஏற்பட்டது. தகராறு அடிதடியானது. மணமகன் தரப்பினர் ரவி, ஆஷிசை சரமாரியாக தாக்கினர். இதில், படுகாயமடைந்த இருவரும் மயங்கி விழுந்ததனர். உடனடியாக, இருவரையும் மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமத்தனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இருவரையும் பரிசோதித்த டாக்டர்கள்,இருவரும்ஏற்கனவேஉயிரிழந்துவிட்டதாகதெரிவித்தனர். இந்த இரட்டை கொலை சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார் 6 பேரை கைது செய்துள்ளனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## விராட் கோலி பேனர் முன்பு ஆட்டை பலியிட்ட 3 பேர் கைது



பெங்களூரு, மே.7

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கடந்த 3ந்தேதி பெங்களூரு சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் நடந்த ஆட்டத்தில் பெங்களூரு ராயல் சேலஞ்சர் அணி, சென்னை சூப்பர் கிங்சை வீழ்த்தியது. இதனை பெங்களூருஅணிரசிகர்கள்கோலாகலமாககொண்டாடிவருகிறார்கள்.

இந்த வெற்றியை கொண்டாடும் வகையில் கர்நாடக மாநிலம் சித்ரதுர்கா மாவட்டம் முலகால்மூரு தாலுகா மரியம்மனஹள்ளி கிராமத்தில் பெங்களூரு அணி ரசிகர்கள், கிரிக்கெட் வீரர் விராட் கோலியின்பேனரைவைத்துள்ளனர். அந்த பேனர் முன்பு 3 வாலிபர்கள் ஆடு ஒன்றை அரிவாளால் வெட்டி பலி கொடுத்தனர்.மேலும் அந்த ஆட்டின்ரத்தத்தை விராட் கோலியின் பேனர்மீது தெளித்து அபிஷேகம் செய்தனர்.

இதை வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் வெளியிட்டனர். தற்போதுஅந்தவீடியோவைரலாகிவருகிறது.இதுகுறித்துமுலகால்மூரு போலீசார்வழக்குப்பதிவுசெய்துவிசாரணைநடத்தினர்.விசாரணையில் மரியம்மனஹள்ளியை சேர்ந்த பாலய்யா, ஜெயண்ணா, திப்பேசாமி ஆகிய ஆகிய 3 பேர் ஆட்டை பலியிட்டது தெரியவந்தது. இதையடுத்து அவர்கள் 3 பேரையும் போலீசார் கைது செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# நேற்று பிறந்தவர்கள் எல்லாம் நான்தான் அடுத்த முதல்அமைச்சர் என்கிறார்கள்: மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை, மே.7

மாற்றுக்கட்சியினர் திமுகவில் இணையும் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு பேசியதாவது;

"எனது தலைமையினான திமுக அரசு பதவியேற்று நாளை 5ம் ஆண்டு தொடங்குகிறது. 7வது முறையாக திமுகவே ஆட்சியமைக்கும். இந்தியாவுக்கே வழிகாட்டும் ஆட்சி, மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டும் ஆட்சி, ஒன்றிய அரசுக்கே வழிகாட்டும் ஆட்சி திமுக ஆட்சிதான்.

நேற்று பிறந்தவர்கள் எல்லாம் நான்தான் ।அடுத்த முதலமைச்சர் என்கிறார்கள்.. நேற்று கட்சி தொடங்கியவர்கள் எல்லாம் நான்தான் அடுத்த முதலமைச்சர் என்கின்றனர். அரசியலுக்கு அரிச்சுவடே தெரியாதவர்கள் எல்லாம் அடுத்த முதலமைச்சர்.. என்று பேசக்கூடிய நிலைதான் உள்ளது. நாம் அதைப்பற்றி கவலைப்பட வேண்டியதே இல்லை." இவ்வாறு அவர் பேசினார்

## "குளிர் ஜூரம் தான் வருமே தவிர..." தமிழிசைக்கு அமைச்சர் சேகர் பாபு பதிலடி



சென்னை, மே.7

தமிழகத்தில் இருந்து பாகிஸ்தானியர்கள் வெளியேற்றப்படவில்லைஎன்றால் முதல்அமைச்சர்பின் விளைவுகளை சந்திக்க நேரிடும் என பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் நேற்று கூறி இருந்தார். இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களிடம் கூறியதாவது:

"இனம், மதம், மொழிகளுக்கு அப்பாற்பட்ட பூமி தமிழ்நாடு. தீவிரவாதத்திற்கு எப்போது முதலமைச்சர் துணை போக மாட்டார். தீவிரவாதத்தை இரும்பு கரம் கொண்டு அடக்குவார். அமைதி பூங்காவாக இருக்கும் தமிழ்நாட்டில் சிலர் விஷம கருத்துக்களை விதைக்க முற்படுகிறார்கள். அதற்கு துளியும் தமிழ்நாடு இடம் தராது.

இங்கு இஸ்லாமியர்களும், இந்துக்களும் சகோதர சகோதரிகளாக உள்ளனர். மொழியால், மதத்தால் பிளவு ஏற்படுத்தி தேர்தல் நேரத்தில் குளிர்காயலாம் என்று தமிழிசை சௌந்தரராஜன் நினைக்கிறார். ஆனால் அவருக்கு குளிர் ஜூரம் தான் வருமே தவிர வேறு எதுவும் தமிழ்நாட்டில் நடக்காது."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி பணிகள் தீவிரம்

ஊட்டி, மே.7

மலைகளின் அரசியான நீலகிரி மாவட்டம் ஊட்டியில் நிலவும் இதமான காலநிலையை அனுபவிக்கவும், சுற்றுலா தலங்களை கண்டு ரசிக்கவும் தமிழகத்தின் பிற மாவட்டங்கள், வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் அதிகளவிலான சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். இவ்வாறு வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கவும், கவரவும் மாவட்டம் நிர்வாகம் சார்பில் கோடைக்காலத்தில் கோடை விழா நடத்தப்படுகிறது.

அதன்படி இந்தாண்டு கோடை விழாவின் முதல் நிகழ்ச்சியான காய்கறி கண்காட்சி கோத்தகிரியில் தொடங்கி முடிந்துவிட்டது. இதையடுத்து மலர் கண்காட்சி, ரோஜா கண்காட்சி, பழ கண்காட்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. இதில் மலர் கண்காட்சி நூற்றாண்டு பழமை வாய்ந்த ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது. வருகிற 16ந் தேதி மலர்கண்காட்சி தொடங்கி 21ந் தேதிவரை நடத்தப்பட உள்ளது.

இதையொட்டி கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு மலர் நாற்றுகள் நடும் பணி தொடங்கி முடிந்தது. தற்போது மலர் நாற்றுகள் அடங்கிய பூந்தொட்டிகளை அடுக்குதல் உள்ளிட்ட பல்வேறு முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இதில் குறிப்பிடும்படியாக பூங்கா நுழைவு வாயில் பகுதி கதவுகள், பூங்காவில் உள்ள முக்கியமான பொருள்கள் ஆகியவற்றுக்கு வர்ணம் தீட்டும் பணிகள் நடக்கிறது. கண்ணாடி மாளிகையை சரிசெய்யும் பணிகள் நடக்கிறது. அத்துடன் மலர் கண்காட்சிக்காக புல் மைதானத்தில் மேடை அமைக்கும் பணிகள் தொடங்கப்பட உள்ளது.

அடுத்த வாரத்தில் மலர் கண்காட்சிக்கான அனைத்து பணிகளையும் முடிக்க முடிவு செய்து இருப்பதாக பூங்கா நிர்வாகத்தினர் தெரிவித்தனர். இதேபோல் ரோஜா பூங்காவில் வருகிற 10ந் தேதி ரோஜா கண்காட்சி தொடங்க உள்ளது. அங்கும் கூடாரம் அமைத்தல், மேடை அமைத்தல், அழகுபடுத்துதல், வர்ணம் தீட்டுதல் உள்ளிட்ட பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது..

## தர்மபுரி பொறுப்பு அமைச்சர் எம்.ஆர்.கே. 3 மாதத்திற்கு பிறகு 60வதுமுறை சுற்றுப்பயணம்: பல்வேறு நல திட்டங்கள் துவக்கம்



தர்மபுரி மாவட்ட பொறுப்பு அமைச்சர் எம் ஆர் கே பன்னீர்செல்வம் 3 மாதத்திற்கு பிறகு தர்மபுரி மாவட்டத்தில் சுற்றுப்ப யணம் மேற்கொண்டு பல்வேறு நலத்திட்ட பணிகளை வழங்கினார்

இந்த நிகழ்ச்சியில் தர்மபுரி நாடாளு மன்ற உறுப்பினர் மணி, மாவட்ட ஆட்சியர் சதீஷ் ,கூடுதல் ஆட்சியர் கேத்தரின் சரண்யா , மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா,பென்னாகரம் சட்ட மன்ற உறுப்பினர் மணி, தர்மபுரி சட்ட மன்ற உறுப்பினர் வெங்கடேசன், திமுக மேற்கு மாவட்ட செயலாளர் பி.பழனியப்பன்,முன்னாள் சட்ட மன்றஉறுப்பினர்தடங்கம்சுப்பிரமணி, பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய செயலாளர் பி.எஸ். சரவணன், கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்துக்குமார் மற்றும் அனைத்து துறை சார்ந்த அதிகாரிகளும் இந்த சுற்று பயணத்தின் போது உடன் இருந்தனர்

பாப்பிரெட்டிப்பட்டியில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அமைச்சர் எம் ஆர் கே பன்னீர் செல்வம் கலந்து கொண்டு 1166 பயனாளிகளுக்கு ரூபாய் 23 கோடியே 18 லட்சத்து 55 ஆயிரத்து 938 மதிப்பில் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கினார்அ ரூரில் நடைபெற்ற அரசு விழாவில் அரசு தொழில்நுட்ப பயிற்சி மைய புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டி பணியை துவக்கி வைத்தார், இதன் மதிப்பு 6 கோடியே 45 லட்சம் ஆகும், இதே போல தர்மபுரியில்பென்னாகரம் வட்டத்திற்கு உட்பட்ட பருவதல்லியில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கினையும் அமைச்சர் துவக்கி வைத்தார், அப்போது விளையாட்டில் சிறந்து விளங்கிய மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளையும் வழங்கி உற்சாகப்படுத்தினார்த ர்மபுரி மாவட்டத்தில் புதிய பேருந்துகள் வழித்தட நீட்டிப்பு போன்றவற்றையும் துவக்கி வைத்தார் அமைச்சர் எம் ஆர் கே பாப்பிரெட்டிப்பட்டியில் பேசும்போது தர்மபுரி மாவட்ட வளர்ச்சிக்கு திமுக அரசு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருவதாகவும் ,மகளிர் உரிமைத்தொகை ,அரசு பேருந்தில் பெண்கள் கட்டணம் இல்லா பயணம், கலசப்பாடி பகுதிக்கு சாலை வசதி. நீண்ட நாட்கள் கோரிக்கையான தர்மபுரி வத்தல் மலை பேருந்து வசதி, தர்மபுரியில் புதிய சிப்காட் தொழில் பேட்டை அமைப்பு, இதன் மூலம் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புஎன திமுக அரசு மக்கள் நலன் சார்ந்த விஷயங்களை செய்துள்ளதாக தெரிவித்தார்அ வர் பேச்சின் போது தர்மபுரி மாவட்டஆட்சியர் சதீஷ் சிறப்பாக செயல்பட கூடியவர், திறமை மிக்கவர்,இவரது ஆட்சி பணியால் தர்மபுரி மாவட்டம் வளர்ச்சியை எட்டும் என பாராட்டு தெரிவித்தார்இ ந்த நிகழ்ச்சிகளில் அனைத்து அரசு துறை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்






# சித்ரா பவுர்ணமி: விழுப்புரம் திருவண்ணாமலை இடையே சிறப்பு ரெயில்கள் இயக்கம்



சென்னை, மே.7

திருவண்ணாமலையில் புகழ்பெற்ற அருணாச்சலேஸ்வரர் கோவில் உள்ளது. இக்கோவிலில் நடைபெறும் சித்ரா பவுர்ணமி விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள். எனவே கூட்ட நெரிசலை தவிர்க்கும் வகையிலும், பக்தர்களின் வசதிக்காகவும் விழுப்புரத்தில் இருந்து திருவண்ணாமலைக்கு தெற்கு ரெயில்வே நிர்வாகம் சார்பில் சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட உள்ளன.

இது குறித்து திருச்சி கோட்ட ரெயில்வே மக்கள் தொடர்பு அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

விழுப்புரம் ரெயில் நிலையத்தில் இருந்து வருகிற 11, 12ந் தேதிகளில் காலை 9.25 மணிக்கு புறப்படும் விழுப்புரம் திருவண்ணாமலை முன்பதிவில்லா சிறப்பு ரெயில் (வண்டி எண் 06130) காலை 11.10 மணிக்கு திருவண்ணாமலை ரெயில் நிலையத்தை சென்றடைகிறது. அதேபோல் மறுமார்க்கத்தில் திருவண்ணாமலை ரெயில் நிலையத்தில் இருந்து 11, 12ந் தேதிகளில் பிற்பகல் 12.40 மணிக்கு புறப்படும் திருவண்ணாமலை விழுப்புரம் முன்பதிவில்லா சிறப்பு ரெயில் (வண்டி எண் 06129) மதியம் 2.15 மணிக்கு விழுப்புரம் ரெயில் நிலையத்தை வந்தடைகிறது.

மேலும் விழுப்புரம் ரெயில் நிலையத்தில் இருந்து 11, 12ந் தேதிகளில் இரவு 9.15 மணிக்கு புறப்படும் விழுப்புரம் திருவண்ணாமலை முன்பதிவில்லா சிறப்பு ரெயில் (வண்டி எண் 06131) இரவு 10.45 மணிக்கு திருவண்ணாமலைக்கு சென்றடைகிறது. அதேபோல் மறுமார்க்கத்தில் 12, 13ந் தேதிகளில் அதிகாலை 3.30 மணிக்கு திருவண்ணாமலை ரெயில் நிலையத்திலிருந்து புறப்படும் திருவண்ணாமலை விழுப்புரம் முன்பதிவில்லா சிறப்பு ரெயில் (வண்டி எண் 06132) அதிகாலை 5 மணிக்கு விழுப்புரம் ரெயில் நிலையத்தை வந்தடைகிறது. இந்த சிறப்பு ரெயில்கள் வெங்கடேசபுரம், மாம்பழப்பட்டு, ஆயந்தூர், திருக்கோவிலூர், ஆதிச்சனூர், அண்டம்பள்ளம், தண்டரை ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று செல்லும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானில் இருந்து சென்னையை தாக்க முடியுமா...?



சென்னை, மே.7

பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து இந்தியா பாகிஸ்தான் இடையே போர் ஏற்படுமானால், பாகிஸ்தான் இந்தியாவின் எந்த பகுதிகளை குறிவைக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தான் இந்த போர் கால ஒத்திகை நடத்தப்படுகிறது. அந்த வகையில் தமிழகத்தில் கல்பாக்கம் அணுமின் நிலையம் மற்றும் துறைமுகத்தில் தாக்குதல் நடத்தப்படலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது.

அதனால் தான் மத்திய உள்துறை அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்படி, இந்த இடங்களில் போர்கால ஒத்திகை நடத்தப்பட உள்ளது. பாகிஸ்தானில் இருந்து நம் சென்னையை தாக்க முடியுமா? என்ற கேள்வி மக்களிடம் ஏற்பட்டுள்ளது. அதற்கு பதில் ஆம் என்பது தான். பாகிஸ்தான், அணு ஆயுதங்கள் மற்றும் பலவகைத் தூரநிலை ஏவுகணைகளைக் கொண்ட நாடாகும். குறிப்பாக சாஹீன் 2 மற்றும் அபபீல் போன்ற ஏவுகணைகள், 1,500 முதல் 2,200 கி.மீ. வரை உள்ள இலக்குகளை தாக்கக்கூடியவை.

பாகிஸ்தானிலிருந்து சென்னை வரை உள்ள தூரம் சுமார் 1,800 கி.மீ. என்பதால், தொழில்நுட்ப ரீதியாக சென்னையை தாக்கும் வாய்ப்பு இருப்பதாக யூகிக்கப்பட்டுள்ளது. இதற்காகத்தான் தற்போது போர்கால ஒத்திகைக்காக தமிழ்நாட்டில் கல்பாக்கம் அணுமின் நிலையம் மற்றும் சென்னை துறைமுகம் ஆகிய இரண்டு இடங்கள் மட்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஆனால், இதற்கு மேலாக, இந்தியாவிடம் ஏற்கனவே பல்வேறு பாதுகாப்பு அமைப்புகள் உள்ளன.

ஏவுகணை தடுப்பு முறைகள், முன்னெச்சரிக்கை ரேடார் அமைப்புகள் மற்றும் பதிலடி தாக்குதலை நடத்தும் அளவிற்கு ராணுவ வலிமையும் இருக்கின்றன. இந்த ஒத்திகைகள் உண்மையான தாக்குதலுக்கு முன்னேற்பாடாகவும், அவசர நிலைகளில் நம்முடைய அரசு துறைகளின் செயல்திறனை பரிசோதிக்கும் முயற்சியாகவும் நடத்தப்படுகின்றன. எனவே, பொதுமக்கள் அமைதியாக இருக்கவும், தவறான தகவல்களை பகிராமல் இருக்கவும் அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

# அங்கன்வாடி மையங்களுக்கு 15 நாட்கள் கோடை விடுமுறை



சென்னை, மே.7


அரசின் கொள்கை முடிவின்படி, ஆண்டு முழுவதும் அங்கன்வாடி குழந்தைகள் மையங்கள் செயல்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள கடந்த 2018ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ந்தேதி அரசாணை வெளியிடப்பட்டது.

அதன்பின்னர், 2024ம் ஆண்டு மார்ச் மாதம் 15 ந்தேதி வெளியிடப்பட்ட அரசாணையில், 'மே 8ந்தேதி முதல் 22ந்தேதி வரை 15 நாட்களுக்கு அங்கன்வாடி குழந்தைகள் மையங்களுக்கு கோடை விடுமுறை அளித்தும், 2 வயது முதல் 6 வயதுக்கு உட்பட்ட முன்பருவக் கல்வி படிக்கும் குழந்தைகளுக்கு 50 கிராம் சத்துமாவை 15 நாட்களுக்கு சேர்த்து 750 கிராம் கோடை விடுமுறை தொடங்குவதற்கு முன்பு வழங்க அனுமதி வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டு வருகிற 11 ந்தேதி முதல் 25ந்தேதி வரையிலான 15 நாட்களுக்கு கோடை விடுமுறை வழங்குமாறு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள், இயக்குனர் மற்றும் குழும இயக்குனர் அரசிடம் கேட்டு இருந்தனர். அதனை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, 2018 ம் ஆண்டு ஏப்ரல் 10ந்தேதி வெளியிடப்பட்ட அரசாணையை நிறுத்தி வைத்தும், கோடைவெப்பத்தின் தாக்கத்தில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் நோக்கில் நடப்பாண்டில் வருகிற 11ந்தேதி முதல் 25ந்தேதி வரை 15 நாட்களுக்கு குழந்தைகள் மையங்களுக்கு கோடை விடுமுறை அளிக்கப்படுவதாகவும் அரசாணையில் தெரிவித்துள்ளது.

மேலும், அந்த நாட்களில் குழந்தைகளுக்கு நாள் ஒன்றுக்கு 50 கிராம் வீதம் 750 கிராம் சத்துமாவினை கோடை விடுமுறைக்கு முன்னர் வீட்டிற்கு எடுத்துச் சென்று பயன்படுத்தும் வகையில் பயனாளிகளுக்கு வழங்கவும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

# சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு கூடுதல் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என அறிவிப்பு



சென்னை, மே.7

சித்ரா பௌர்ணமியை ஒட்டி வரும் 11, 12ம் தேதிகளில் திருவண்ணாமலைக்கு, மாநிலத்தின் பல பகுதிகளில் இருந்து கூடுதல் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதுகுறித்து வெளியான அறிக்கையில்;

11/05/2025 இரவு 08.48 மணி முதல் 12/05/2025 இரவு 10.44 மணி வரை (திங்கள்கிழமை) சித்திரா பௌர்ணமியைமுன்னிட்டு திருவண்ணாமலைக்கு 11/05/2025 மற்றும் 12/05/2025 ஆகிய நாட்களில் சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்கும் மற்றும் பல்வேறு இடங்களிலிருந்து திருவண்ணாமலைக்கும் கூடுதலான பயணிகள் பயணம் மேற்கொள்வார்கள் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து 11/05/2025 அன்று 1,156 பேருந்துகளும் மற்றும் 12/05/2025 அன்று 966 பேருந்துகளும் சென்னை மாதவரத்திலிருந்து 11/05/2025 அன்று 150 பேருந்துகளும்12/05/2025 அன்று 150 பேருந்துகளும் தினசரி இயக்ககூடிய பேருந்துகளுடன் கூடுதலாக இயக்கப்படும் மற்றும் சென்னை கோயம்பேட்டிலிருந்தும் இயக்கப்படும்.

மேலும், பல்வேறு இடங்களிலிருந்து திருவண்ணாமலைக்கு 11/05/2025 அன்று 1,940 பேருந்துகளும்12/05/2025 அன்று 1,530 பேருந்துகளும் தினசரி இயக்ககூடிய பேருந்துகளுடன் கூடுதலாக இயக்கப்படும்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக இருக்கை மற்றும் படுக்கை வசதி கொண்ட குளிர்சாதனம் கொண்ட 40 பேருந்துகள் சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலைக்கு 11/05/2025 மற்றும் 12/05/2025 ஆகிய நாட்களில் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திருநெல்வேலி, நாகர்கோவில், தென்காசி, தூத்துக்குடி மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களிலிருந்து திருவண்ணாமலைக்கு அரசு பேருந்துகளில் முன்பதிவு செய்து பயணிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.in மற்றும் Mobile App மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இச்சிறப்புபேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே பயணிகள் மேற்கூறிய வசதியினை பயன்படுத்தி தங்களது பயணத்தினை மேற்கொள்ள இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

# தேனி மாவட்டத்திற்கு மே 9, 12 தேதிகளில் விடுமுறை அறிவிப்பு

தேனி, மே.7

தேனி மாவட்டத்தில் உள்ள வீரபாண்டி கௌமாரியம்மன் கோவில் சித்திரைத் திருவிழா இன்று மே 6 முதல் வரும் 13 ஆம் தேதி வரை வெகு விமரிசையாக நடைபெற உள்ளது. விழாவின் முக்கிய நிகழ்வான திருத்தேரோட்டம் வரும் மே 9 ஆம் தேதியன்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெற உள்ளது. இதனால் மே 6ம் தேதியன்று தேனி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளித்து அம்மாவட்ட கலெக்டர் ரஞ்ஜீத் சிங் உத்தரவிட்டுள்ளார். இதேபோல தேனி மாவட்டம் கூடலூர் அருகே விண்ணேற்றிப்பாறை மலையில் உள்ள மங்கலதேவி கண்ணகி கோவில் சித்திரை முழுநிலவு திருவிழா வரும் மே 12 ஆம் தேதியன்று நடைபெற உள்ளது. இத்திருவிழாவை முன்னிட்டும் வரும் மே 12 ஆம் தேதியன்று தேனி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளித்து மாவட்ட கலெக்டர் ரஞ்ஜீத் சிங் உத்தரவு பிறப்பித்துள்ளார். இந்த இரு விடுமுறை தினங்களை ஈடுசெய்யும் வகையில் வரும் மே 17 மற்றும் 31 ஆகிய இரு தேதிகளில் முழு வேலை நாட்களாக செயல்படும் என மாவட்ட நிர்வாகம் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மதுரையை போன்றே தேனி வீரபாண்டி கோவில் திருவிழாவும் அப்பகுதியில் மிகவும் பிரபலமாகவே பார்க்கப்படுகிறது. இந்த திருவிழாவிலும் பக்தர்கள் கூட்டம் அலைமோதும் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு பண்டிகை கால முன்பணம் உயர்வு அரசாணை வெளியீடு



சென்னை, மே.7

தமிழக சட்டசபையில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த ஏப்ரல் 28ந்தேதி அவை விதி 110ன் கீழ், அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்காக 9 புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். அதில் ஒன்றாக, பண்டிகை கால முன்பண உயர்வு பற்றிய அறிவிப்பை வெளியிட்டார்.

அதில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களின் குடும்பத்தினருடன் பண்டிகைகளை சிறப்பாக கொண்டாடும் வகையில், இது வரை வழங்கப்பட்டு வரும் பண்டிகை கால முன்பணம் ரூ.10 ஆயிரம், இனி ரூ.20 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில், இந்த அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக அதற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நிதித்துறை முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

உள்ளாட்சி அமைப்புகளின் கல்வி நிறுவனங்கள், அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள், அரசு ஊழியர்கள் என பண்டிகை கால முன்பணம் பெறும் தகுதியுடைய அனைவருக்கும், இந்த அரசாணை பொருந்தும். அதன்படி அவர்கள் ரூ.20 ஆயிரத்தை பண்டிகை கால முன்பணமாக பெற்றுக் கொள்ளலாம். அந்தப் பணத்தை பிடித்தம் செய்யும் முறையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

# ஆலங்குளம் அருகே சிவலார்குளம் ஊராட்சியில் கிராம சபைக் கூட்டம்



ஆலங்குளம், மே 7

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், சிவலார்குளம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில், மே தினத்தை முன்னிட்டு கிராம சபைக் கூட்டம் தலைவர் க.வள்ளியம்மாள் தலைமையில் நடைபெற்றது. இதில், ஊரக பகுதிகளில் ஒற்றைச் சாளர முறையில் சுய சான்றிதழினை அடிப்படையாகக் கொண்டு கட்டிட அனுமதி பெறும் வகையில் ஒருங்கிணைக்கப்பட்ட நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டு 2,500 சதுரஅடி' வரையிலான மனைப்பரப்பில் 3,500 சதுர அடிவரையிலான கட்டிட பரப்பில், தரை அல்லது தரைமற்றும் முதல்தளம் கொண்ட குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்கு உடனடி பதிவின் மூலம் அனுமதி வழங்கப்படுவதை உறுதி செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில், ஊராட்சி எழுத்தர் பழனி, உறுப்பினர்கள், ஊர்பொதுமக்கள் திரளானோர் கலந்துகொண்டனர்.

# திண்டுக்கல்லில் 30-வது மாவட்ட அளவிலான ஆணழகன் போட்டி




திண்டுக்கல், மே.7

திண்டுக்கல் மாவட்ட ஜிம் உரிமையாளர் சங்கம் திண்டுக்கல் மாவட்ட அமெச்சூர் ஆணழகன் சங்கம் சார்பில் மாவட்ட அளவிலான 30 வது அமெச்சூர் ஆணழகன் போட்டி தனியார் மஹாலில் நடைபெற்றது.

இதில் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 28 உடற்பயிற்சி கூடங்களிலிருந்து 200க்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டனர். 50, 55, 60 ,65 70, 75 , 80, 85 கிலோ ஆகிய எடை பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றது.

இதில் சப் ஜூனியர், ஜூனியர், சீனியர், மாஸ்டர் என்ற நிலையில் போட்டி நடத்தப்பட்டன. உடற்கட்டு கோணங்கள் அடிப்படையில், தேசிய நடுவர்கள் மயில்சாமி, சிவக்குமார் ஆண்ட்ரூ ஆகியோர் கலந்து கொண்டு மதிப்பீடு செய்தனர் திண்டுக்கல் ஜிம்மைச் சேர்ந்த திவான் பெக்ராத் முதல் பரிசு பெற்று திண்டுக்கல் ஆணழகனாக தேர்வு செய்யப்பட்டார்.

இரண்டாவது பரிசை டைட்டான் ஜிம்மைச் சேர்ந்த யாசர் அரபத் , மூன்றாம் பரிசை வாரியர் ஜிம்மைச் சேர்ந்த கைலாஷ் பெற்றனர்.

திண்டுக்கல் மாவட்ட ஹாக்கி சங்கத்தின் தலைவர் நாட்டாமை காஜா மைதீன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பரிசுகளை வழங்கி கௌரவித்தார்.

இப்போ போட்டியினை திண்டுக்கல் மாவட்ட உடற்பயிற்சி உரிமையாளர் சங்க தலைவர் ஜான் வில்லியம் லாரன்ஸ் செயலாளர் சதீஷ்குமார் ஆர்மச்சூர் சங்க செயலாளர் ராஜ்குமார் மற்றும் நிர்வாகிகள் போட்டிகளை ஏற்பாடு செய்திருந்தனர். இப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் நினைவு பரிசுகளும் வழங்கப்பட்டன

# முறைகேடாக சுங்க வரி வசூல் செய்வதை அரசு தடுக்ககோரி இளம் விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்




நாமக்கல் மே 7

நாமக்கல் மாவட்டம் உட்பட தமிழகம் முழுவதும் வாரச்சந்தை மற்றும் தினசரி சந்தைகளில் விவசாயிகளிடம் முறைகேடாக சுங்கவரி வசூல் செய்வதை கண்டித்தும் அதனை அரசு ரத்து செய்ய கோரியும் இளம் விவசாயிகள் சங்கத்தின் சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள வாரச்சந்தை மற்றும் தினசரி சந்தைக்கு விவசாயிகள் கொண்டு வரும் விளைபொருட்களுக்கு முறைகேடாக சுங்க வரி வசூல் செய்வதை கண்டித்து தமிழக முழுவதும் உள்ள வாரச்சந்தை மற்றும் தினசரி சந்தைகளில் விவசாயிகளிடமிருந்து முறைகேடாக வசூல் செய்யும் சுங்க வரியை தமிழக அரசு உடனடியாக ரத்து செய்ய கோரியும் செவ்வாய்க்கிழமை காலை நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் காமராஜர் சிலை முன்பு இளம் விவசாயிகள் சங்கத்தின் சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சங்க மாநிலத் தலைவர் ஜெ.சௌந்தரராஜன் தலைமை வகித்தார், மாநில செயற்குழு உறுப்பினர் வி.சரவணன் வரவேற்றார் மாநில செயலாளரர் எம்.சௌந்தரராஜன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பா.இளவரசன், இளைஞர் அணி செயலாளர் பிரகாஷ், ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் கண்டன உரையாற்றிய உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் ஆர்.வேலுச்சாமி பேசும் போது தமிழக அரசு விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவது இல்லை வேளாண்மை துறை, தோட்டக்கலைத்துறை, மற்றும் வேளாண்மை பொறியியல் துறை சார்ந்த மாவட்ட அதிகாரிகள் விவசாயிகள் குறைகளை தீர்க்கும் வகையில் செயல்படுவதில்லை 60மூ வாக்குகளை கொண்ட விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று அரசாணை வெளியிட்டால் மட்டுமே 2026ம் பொதுத் தேர்தலில் விவசாயிகள் அரசுக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள். விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றாத அதிகாரிகளை இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்றார். ஆர்ப்பாட்டத்தில் கௌரவத் தலைவர் சாமி பிள்ளை, செயற்குழு உறுப்பினர் ரவி, மேற்கு மாவட்ட தலைவர் நந்தகுமார் மற்றும் மாநில மாவட்ட ஒன்றிய, பேரூர், பொறுப்பாளர்களும் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்

# நகர்புற தற்செயல் / இடைக்காலத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல்கள்: மாவட்ட கலெக்டர் வெளியிட்டார்



தர்மபுரி, மே.7

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய அறிவுறுத்தலின்படி, தருமபுரி நகராட்சி வார்டு எண்.11 மற்றும் அரூர் பேரூராட்சி வார்டு எண்.6 ஆகிய நகர்புற தற்செயல் / இடைக்காலத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல்கள் தருமபுரி மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ், வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய அறிவுறுத்தலின்படி, தருமபுரி நகராட்சி வார்டு எண்.11 மற்றும் அரூர் பேரூராட்சி வார்டு எண்.6 ஆகிய நகர்புற தற்செயல் / இடைக்காலத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல்கள் தருமபுரி மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ், வெளியிடப்பட்டது.

தருமபுரி மாவட்டத்தில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 31.03.2025 வரை ஏற்பட்டுள்ள காலிப் பதவியிடங்களை நிரப்புவதற்கான தற்செயல் / இடைக்காலத் தேர்தல்கள் தருமபுரி நகராட்சியின் வார்டு எண்.11 மற்றும் அரூர் பேரூராட்சியின் வார்டு எண்.6 ஆகியவற்றிற்கான தற்செயல் / இடைக் காலத் தேர்தல்கள் நடைபெறவுள்ளது. தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய அறிவுறுத்தலின்படி, மேற்கண்ட நகர்புற தற்செயல்/ இடைக்காலத் தேர்தலுக்கு தருமபுரி நகராட்சி வார்டு எண்.11ல் 1095 வாக்காளர்கள் கொண்ட வாக்காளர்ப் பட்டியலினையும் மற்றும் அரூர் பேரூராட்சி வார்டு எண்.6ல் 975 வாக்காளர்கள் கொண்ட வாக்காளர்ப் பட்டியலினையும் தருமபுரி மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ், வெளியிட்டார்கள்.

இந்நிகழ்சியில் தருமபுரி நகர்மன்ற தலைவர் லட்சுமி நாட்டான் மாது, தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் இரா. காயத்ரி, தருமபுரி நகராட்சி ஆணையர் சேகர், மாவட்ட ஆட்சியரக வளர்ச்சி பிரிவு அலுவலர்கள் மற்றும் நகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கோவில் பிரசாதத்தில் பாம்பு: பக்தர்கள் அதிர்ச்சி

கிருஷ்ணகிரி, மே.7

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் மலைக்கோவில் என்றழைக்கப்படும் மரகதாம்பிகை உடனுறை சந்திரசூடேஸ்வரர் கோவில் உள்ளது. 800 ஆண்டுகள் பழமையான இந்த கோவில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது. இந்தநிலையில், சந்திரசூடேஸ்வரர் கோவிலில் பக்தர்களுக்கு தரப்பட்ட புளியோதரையில் இறந்த நிலையில் பாம்பு குட்டி இருந்ததால் பக்தர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.



பிரசாதம் கொடுத்தவரிடம் பாம்பு இருந்தது குறித்து கேட்டபோது அலட்சியமாக பதில் அளித்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து பக்தர்கள் சார்பில் அறநிலையத் துறையில் புகார்அளிக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. கோவிலில் வழங்கப்பட்ட பிரசாதத்தில் பாம்பு இறந்த கிடந்த சம்பவம் பக்தர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

# நெல்லையில் 90 கிராம் கஞ்சா பறிமுதல்: வாலிபர் கைது

திருநெல்வேலி மே.7

திருநெல்வேலி தாலுகா காவல்நிலைய சரகத்திற்கு உட்பட்ட பகுதியான பஞ்சாயத்து அலுவலகம் அருகில் உள்ள பேருந்து நிலையம்அருகேஇன்ஸ்பெக்டர் சசிகுமார் தலைமையிலான காவல் துறையினர் நேற்று முன்தினம் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கே சந்தேகப்படும்படி நின்றுகொண்டிருந்த கே.டி.சி. நகரைச் சேர்ந்த இசக்கிராஜாவை (வயது 35) போலீசார் சோதனை செய்தனர். அப்போது அவர் அரசால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய 90 கிராம் கஞ்சா விற்பனை செய்வதற்காக வைத்திருந்தது தெரியவந்தது. இதனையடுத்து மேற்சொன்ன இன்ஸ்பெக்டர், இசக்கிராஜாவை காவல் நிலையம் அழைத்துச் சென்று, வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு நேற்று முன்தினம் கைது செய்தார். மேலும் அவரிடமிருந்து 90 கிராம் கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்தனர்.



# பட்டுக்கோட்டை முன்னாள் பாஜக பெண் நிர்வாகி கொலை வழக்கில் 3 பேர் மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்

பட்டுக்கோட்டையில் பாஜக பெண் நிர்வாகி கொலை வழக்கு:கபிலன், குகன் உள்ளிட்ட 3 பேர் மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் சரண்டர் அண்ணா நகர் காவல்நிலையத்திற்கு அனுப்பிவைப்பு




பாஜக நிர்வாகி சரண்யாவின் 2ஆவது கணவர்பாலனின் முதல் மனைவியின் மகன் கபிலன் மற்றும் குகன் ஆகிய மூன்று பேர் கைது சரண்யாவின் 2 ஆவது கணவர் பாலனின் சொத்துக்களை அவரது மகன் கபிலனுக்கு வழங்க சரண்யா எதிர்ப்பு தெரிவித்ததால் கொலை செய்துள்ளதாக தகவல். பாலனின் மகன்கபிலன் தனது நண்பர்களான குகன் ஆகியோருடன் இணைந்து சரணாயாவை தலை வெட்டி தனியாக துண்டித்து கொலை செய்துள்ளதாகவும் தகவல். மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் சரண்டரான நிலையில் குற்ற சம்பவம் நடைபெற்ற அந்தந்த சரகத்திற்கு உட்பட்ட நிதிமன்றத்தில் சரண்டர் ஆக வேண்டும் என்பதால் அண்ணாநகர் காவல்நிலையத்திற்கு அனுப்பிவைப்பு.

# புதிதாகக் கட்டப்பட்டுவரும் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடத்தின் கட்டுமானப் பணி: செய்தியாளர்கள் பயணத்தின்போது கலெக்டர் ஆய்வு

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டத்தின்கீழ் ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடத்தின் கட்டுமானப் பணியினை செய்தியாளர்கள் பயணத்தின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு. அருணா, நேரில் பார்வையிட்டார்.



பின்னர், செய்தியாளர்கள் பயணத்தின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்களின் நலன் காத்திடும் வகையில் கிராமப்புறங்களில் பல்வேறுவளர்ச்சித்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் கிராமப்புறங்களில் சாலை வசதி, மின் வசதி, குடிநீர் வசதி, சுகாதார வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

மேலும், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு விண்ணப்பிக்க வருகை தரும் பொதுமக்களின் வசதிக்காகவும், ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் நல்ல காற்றோட்டமான அலுவலக சூழலில் பணியாற்ற ஏதுவாகவும், பழைய பழுதடைந்த கட்டடங்களைக்குப் பதிலாக புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, அரிமளம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில், ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுவரும் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடத்தின் கட்டுமானப் பணி மற்றும் மழையளவு பதிவு செய்யும் கருவியினையும், செய்தியாளர்கள் பயணத்தின்போது நேரில் பார்வையிடப்பட்டது.

எனவே, தமிழக அரசின் மூலம் கட்டப்பட்டுவரும் இந்த புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடப் பணியினை தொடர்புடைய அரசுஅலுவலர்கள் விரைவாகவும், தரமாகவும் முடித்திட வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு. அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த செய்தியாளர்கள் பயணத்தின்போது, அரிமளம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.சரவணராஜா, திரு.பால் பிரான்சிஸ், உதவிப் பொறியாளர் திரு.முத்துகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# தவணி மாரியம்மன் கோயிலில் மழை வேண்டி கூழ்வார்த்தல் விழா

திருவண்ணாமலை மாவட்டம் பெரணமல்லூர் அடுத்த தவணி பகுதியில் மாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. இங்கு ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் மழை வேண்டி கூழ்வார்த்தல் திருவிழா சிறப்பாக நடைபெறுவது வழக்கம். அதன்படி, சித்திரை மாதம் முன்னிட்டு கிராமதேவதை காளிஅம்மனுக்கு காப்பு கட்டி விழா தொடங்கியது. இதனை தொடர்ந்து விழாவில், மாரியம்மனுக்கு குத்துவிளக்கு பூஜை, 108பால்குட அபிஷேகம் என அம்மனுக்கு சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் நடைபெற்று வந்தது. விழாவில் நேற்று பக்தர்கள் தங்களின் வேண்டுதலை பொருட்டு காலை 10மணிக்கு மேல் பொங்கலிட்டு அம்மனுக்கு சிறப்பு படையலிட்டனர். பின்னர் 12மணிக்கு பம்பை, சிலம்பாட்டத்துடன் பூங்கரக ஊர்வலம் வீதிஉலா எடுத்து வந்தனர். அதனை தொடர்ந்து மதியம் 2மணிக்குபக்தர்கள் திரளாக வந்து கோயில் வளாகத்தில் உள்ள கொப்பரையில் மழை வேண்டி கூழ் வார்த்து அம்மனை வழிபட்டனர். இந்நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர். அனைவருக்கும் கூழ் பிரசாதம் வழங்கப்பட்டது. இரவு தெய்வீக நாடகம் நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை விழாக்குழுவினர் மற்றும் கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.



# குறைந்தபட்ச ஊதியத்தை வாழ்க்கை தேவைக்கேற்ப அறிவியல் அடிப்படையில் நிர்ணயம் செய்து மத்திய, மாநில அரசுகள் அமலாக்கிடுக! நாடு தழுவிய போராட்டம்

குறைந்தபட்ச ஊதியத்தை வாழ்க்கை தேவைக்கேற்ப அறிவியல் அடிப்படையில் நிர்ணயம் செய்து மத்திய, மாநில அரசுகள் அமலாக்கிடுக! நாடு தழுவிய போராட்டம் அரியலூரில் ஏ ஐ டி யு சி ஆர்ப்பாட்டம். சுரண்டலில்லா சமூகமே மனித குல விடியலுக்கு வழிவகுக்கும் என கண்டறிந்து மார்க்சிய தத்துவத்தை உலகுக்கு படைத்த மாமேதை காரல் மார்க்ஸின் 207வது பிறந்த நாளான 2025 மே 5 திங்கள் கிழமை அன்று மாவட்ட தலைநகர் அரியலூரில் மாலை 5:00 மணி அளவில் அண்ணா சிலை அருகில் ஏ ஐ டி யு சி தொழிற்சங்கம் சார்பாக குறைந்தபட்சஊதிய கோரிக்கை தின ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட பொதுச் செயலாளர் T, தண்டபாணி தலைமையேற்று சிறப்புரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் ஏ ஐ டி யு சி மாவட்டத் துணைத் தலைவர் R, தனசிங், CPI மாவட்ட குழு உறுப்பினர் G, ஆறுமுகம், அரியலூர் ஒன்றிய செயலாளர் து, பாண்டியன், செந்துறை ஒன்றியம் K, சிவக்குமார் ஆகியோர் உரையாற்றினர். அரியலூர் நகராட்சி ஏஐடியூசி செயலாளர் ரெ, நல்லுசாமி, நீ, சூரியா, த, ஆறுமுகம், ஜெயங்கொண்டம் நகராட்சி ஏ ஐ டி யு சி மா, தம்பிசிவம், நா, சுரேஷ், S, சீதா, P, ஜெயா, P, லெட்சுமி, கலியமூர்த்தி, நா, சுமதி, திருமானூர் ஒன்றிய CPI செயலாளர் G, மருதமுத்து, கட்டட தொழிற்சங்கம் T, ஜீவா, காசிநாதன், செல்வமேரி, சரோஜா, கயர்லாபாத் ரா, பானுமதி உட்பட ஆர்ப்பாட்டத்தில் திரளாக கலந்து கொண்டனர்.




# ஏஈடி பள்ளி வளாகத்தில்தனியார் பள்ளி வாகனங்களுக்கான வருடாந்திர கூட்டாய்வு பணி: மாவட்ட கலெக்டர் தொடங்கி வைத்து ஆய்வு



ஈரோடு, மே.7

ஈரோடு மாவட்டம், பவளத்தான் பாளையம், ஏஈடி பள்ளி வளாகத்தில் மாவட்ட கலெக்டர் ராஜகோபால் சுன்கரா வட்டார போக்குவரத்து துறையின் சார்பில் தனியார் பள்ளி வாகனங்களுக்கான வருடாந்திர கூட்டாய்வு பணியினை தொடங்கி வைத்து, ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு மோட்டார் வாகன சிறப்பு விதிகளின்படி, ஒவ்வொரு ஆண்டும் பள்ளி வாகனங்களில் ஆய்வு மேற்கொள்ள குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு, பெருந்துறை, பவானி, கோபிசெட்டிபாளையம், சத்தியமங்கலம் ஆகிய பகுதிகளைச் சார்ந்த தனியார் பள்ளி வாகனங்களில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு மற்றும் பெருந்துறை பகுதிகளில் உள்ள தனியார் பள்ளி வாகனங்களுக்கான வருடாந்திர கூட்டாய்வு பணியினை மாவட்ட கலெக்டர் தொடங்கி வைத்து பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இதில் தனியார் பள்ளிகளில் செயல்படக்கூடிய வாகனங்களில் அரசின் விதிமுறைகளின்படி, வாகனங்களின் பிளாட்பாரம், இருக்கைகள், வேக கட்டுப்பாட்டு கருவி, அவசர கால வழி கதவு, தீயணைப்பு கருவி, படிகட்டுகள், முதலுதவி பெட்டி, முதலுதவி உபகரணங்கள், வாகனத்தில் முன், பின் பகுதிகளில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதா, மேலும், பல்வேறு பாதுகாப்பு வசதிகளுடன் இயக்கப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும், வாகனங்களின் ஆவணங்கள் மற்றும் மேற்படி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், இந்த ஆய்வுகளில், வாகனங்களில் புத்தகப்பை வைக்கும் தனிஇடம், பள்ளி எம்பலம், காவல்துறை, வட்டார போக்கு வரத்து அலுவலர் மற்றும் பள்ளி நிர்வாகத்தின் தொலைபேசி எண்கள், படிகட்டு உயரம், லாக்புக், ஜன்னல் கம்பிகள், ஓட்டுநர் கேபின், கதவுடன் இடதுபக்க வழி உள்ளிட்டவை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு, பெருந்துறை ஆகிய வட்டார போக்குவரத்து அலுவலகம் சார்பில் 103 பள்ளிகளைச் சேர்ந்த 1072 வாகனங்களில் வருடாந்திர கூட்டாய்வு நடைபெறுகிறது. மேலும், ஒரு வாரத்திற்குள் குறைகளை நிவர்த்தி செய்து மீண்டும் ஆய்விற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டது.

இந்த ஆய்வின்போது, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் ப.ரவி, வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் எம்.பதுவைநாதன் (ஈரோடு மேற்கு (ம) ஈரோடு கிழக்கு (பொ), எம்.மாதவன் (பெருந்துறை), மோட்டர் வானக ஆய்வாளர்கள் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்

# ஆத்தூர் வட்டம், சீவல்சரகு மற்றும் ஒட்டன்சத்திரம் வட்டம், கேதையறும்பு ஊராட்சி ஆகிய இடங்களில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்கள் கட்டும் பணிகளுக்கு சென்னையில் நடைபெற்ற விழா

திண்டுக்கல், மே.7

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சென்னை, நேரு விளையாட்டு அரங்கம், சென்னை ஒலிம்பிக் அகாடமியில் நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டு, முதலமைச்சர் மாநில விளையாட்டு விருதுகளை 39 நபர்களுக்கு வழங்கி, திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மைதானம் வளாகத்தில் ரூ.1.48 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள செயற்கை இழை வளைகோல்பந்து மைதானம், தஞ்சாவூர் மாவட்ட விளையாட்டு மைதானம் வளாகத்தில் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள செயற்கை இழை ஓடுதளப் பாதை மற்றும் இயற்கை புல்வெளி கால்பந்து மைதானம், மதுரை மாவட்ட விளையாட்டு மைதான வளாகத்தில் ரூ.8.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய செயற்கை இழை ஓடுதளப் பாதை மற்றும் இயற்கை புல்வெளி கால்பந்து மைதானம் ஆகியவற்றை திறந்து வைத்து, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, சேலம், மதுரை, கடலூர், தருமபுரி, நாகப்பட்டினம், நாமக்கல், திண்டுக்கல் (ஆத்தூர் வட்டம், சீவல் சரகு மற்றும் ஒட்டன்சத்திரம் வட்டம், கேதையறும்பு ஊராட்சி ஆகிய இடங்களில்) தஞ்சாவூர், திருப்பூர், இராமநாதபுரம், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் தலா ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் 18 முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்கள் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.



அதனைத்தொடர்ந்து. ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்இ. பெரியசாமி, திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், சீவல்சரகு கிராமத்தில் மாவட்ட கலெக்டர்செ.சரவணன், தலைமையில், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டு பணிகளை தொடங்கி வைத்தார்.

பின்னர், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக விளையாட்டுத்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறார். அந்த வகையில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் விளையாட்டு மற்றும் விளையாட்டு வீரர்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

தேர்வு செய்யப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு மாதத்தில் 25 நாட்கள் தொடர் பயிற்சி வழங்கப்படும். பயிற்சி பெறும் மாணவ, மாணவிகளுக்கு சிற்றுண்டி, விளையாட்டு உங்கள் மற்றும் சீருடைகள் வழங்கப்படும், என ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் தெரிவித்தார்.

# சி.பி.சி.ஐ.டி. முன் ஜெயலலிதா உதவியாளர் பூங்குன்றன் ஆஜர் முடிவை நோக்கி கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு



சென்னை, மே.7

முன்னாள் முதல்வர் ஜெ. ஜெயலலிதாவின் கொடநாடு எஸ்டேட் கொலை மற்றும் கொள்ளை வழக்கு மீண்டும் சூடுபிடித்துள்ளது. இவ்வழக்கு தொடர்பாக, ஜெயலலிதாவின் முன்னாள் உதவியாளர் பூங்குன்றன் நேற்று கோவை காந்திபுரத்தில் உள்ள சிபிசிஐடி அலுவலகத்தில் விசாரணைக்காக ஆஜரானார்.

முன்னதாக, கடந்த மார்ச் மாதம் ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் வி.என். சுதாகரன் மற்றும் அவரது முன்னாள் பாதுகாப்பு அதிகாரிகள், சயான் உள்ளிட்ட பலரிடம் சிறப்பு புலனாய்வுக் குழு தீவிர விசாரணை மேற்கொண்டது.

அப்போது, பங்களாவில் இருந்ததாகக் கூறப்படும் கோடிக்கணக்கான ரூபாய் மற்றும் மதிப்புமிக்க பொருட்கள் குறித்து அவர்களிடம் கேள்விகள் எழுப்பப்பட்டன. இதுவரை இந்த வழக்கில் 250க்கும் மேற்பட்டோரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

நீதிமன்ற நடவடிக்கைகளைப் பொறுத்தவரை, முக்கிய குற்றவாளியான கனகராஜின் சர்வதேச தொலைபேசி அழைப்பு விவரங்களை மூலம் பெறுவதற்கு முயற்சித்து வருகிறார்கள்.

கடந்த 2017 ஏப்ரல் 23ஆம் தேதி கொடநாடு எஸ்டேட் பங்களாவில் நடந்த பயங்கர கொள்ளை சம்பவத்தில் காவலாளி ஓம் பகதூர் கொடூரமாக கொலை செய்யப்பட்டார். மற்றொரு காவலாளி கிருஷ்ண பகதூர் பலத்த காயமடைந்தார். இந்த வழக்கில் இதுவரை 10பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், முக்கிய குற்றவாளி என சொல்லப்படும் கனகராஜ் கார் விபத்தில் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது, சிறப்பு புலனாய்வுக் குழு இந்த வழக்கை தீவிரமாக விசாரித்து வருகிறது. குற்றவாளிகளின் தொலைபேசி உரையாடல்கள் மற்றும் மின்னணு சாதனங்களில் உள்ள தகவல்களை ஆய்வு செய்வதற்காக இன் உதவியை நாடியுள்ளனர்.

மேலும், இவ்வழக்கில் கூடுதல் சாட்சிகளையும் விசாரிக்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குரியவராக இருந்த பூங்குன்றன் இன்று விசாரணைக்கு ஆஜராகியுள்ளார். அவரிடம் பங்களாவில் கொள்ளை போன பொருட்கள் குறித்து விசாரணை நடைபெறலாம் என்றும் தெரிகிறது. ஜெயலலிதா இருந்தவரை எப்போதும் பரபரப்பாக காணப்பட்ட பூங்குன்றன், அவரது மறைவுக்குப் பிறகு அமைதியாக அரசியலிலிருந்தும் ஆட்சியாளர்களிடமிருந்தும் ஒதுங்கினார்.

தற்போது தஞ்சாவூர் அருளானந்த நகரில் உள்ள தனது உறவினர் வீட்டில் தங்கியிருந்து விவசாயம் உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. பூங்குன்றனின் இந்த ஆஜர், கொடநாடு வழக்கில் மேலும் பல முக்கிய தகவல்கள் வெளிவரலாம் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

# புதுச்சேரி சங்கமித்ரா பைன்ஆர்ட்ஸ் அகாடமி பரதநாட்டியம். சலங்கை பூஜா நடந்தது

புதுச்சேரி முத்தியால்பேட்டை சங்கமித்ரா பைன் ஆர்ட்ஸ் அகாடமி சார்பில் பரதநாட்டியம் சலங்கை பூஜா கம்பன் கலை அரங்கத்தில் நடந்தது சலங்கை பூஜையில் செல்வி.சுஜா ஸ்ரீ. செல்வி .ஹரிணி ஸ்ரீ. செல்வி. தான்வி என்ற பூமி தேவி. செல்வி .துர்கா ஸ்ரீ. செல்வி யாஷிகா .செல்வி .கவிநிலா ஆகியோரின் பரதநாட்டியம் நடந்தது விழா நிறைவில் நாட்டிய மாணவிகளுக்கு சிறப்பு விருந்தினர்கள் கலைமாமணி டாக்டர் லூர்து சாந்தி. கலைமாமணி டாக்டர் .சண்முக சுந்தரி. நாட்டிய கலா சூடாமணி டாக்டர் .குமரன் ஆகியோர் சான்றிதழ் வழங்கி வாழ்த்தினர் அருகில் நாட்டிய பள்ளியின் நிறுவனர் கோவிந்தன் நாட்டிய குரு அமுதா ஸ்ரீ வாய்ப்பாட்டு கலைஞர் வேல்முருகன். மிருதங்க வித்வான் வசந்த ராஜா. வயலின் கலைஞர்சதீஷ்குமார். புல்லாங்குழல்கலைஞர்பரணி. நாட்டிய துணை பயிற்சியாளர் மனோ ஸ்ரீ. சொல்லிசை வாணி உமா அமலற்பவ மேரி ஒப்பனையாளர் குணசாவித்திரி ஆகியோர் உடன் இருந்தனர் நிகழ்ச்சியை ஏராளமான பொதுமக்கள் கண்டு களித்தனர்



தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

7.5.2025

# தொழில் தொடங்குவதற்கான அனுமதியினை எளிதாக வழங்கவும் வெளிப்படை தன்மையுடன் இருப்பதையும் உறுதி: கலெக்டர் தகவல்



சேலம், மே.7

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் பெரிய நிறுவனங்கள் எளிதாக வணிகம் செய்வது குறித்து ஒற்றைச் சாளர தீர்வுக் குழு குறித்த விழிப்புணர்வுக்கூட்டம் மாவட்ட கலெக்டர் இரா. பிருந்தாதேவி தலைமையில் சேலத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் தெரிவித்த தாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் புதிய தொழில்களை ஊக்குவிக்கும் வகையி லும், தொழில் முனைவோர்களின் புதிய தொழில்களுக்கான அரசு அனுமதிகளை எளிமையாக்கும் வகையிலும், தொழில் துவங்குவதற்கு பல்வேறு அரசு அமைப்புகளிடம் அனுமதி பெறுவதை ஒற்றைச் சாளர முறைக்கு மாற்றப்பட்டு, பல்வேறு துறைகளின் அனுமதிகள் இணையத்தின் மூலம் ஒரே வழியில் வழங்கும் வகையில் ஒற்றைச் சாளர முறையினை செயல்படுத்தி வருகிறார்கள். ஒற்றைச் சாளர முறையானது, அனுமதியினை எளிதாக வழங்கவும், வெளிப்படை தன்மையுடன் இருப்பதற்காகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான ஒப்புதல்கள், தடையில்லா சான்று, துறை சார்ந்த அனுமதி, புதுப்பித்தல், தொழில் உரிமம் இவற்றை எளிதாகப் பெற ஒற்றை சாளர இணையதளம் செயல்படுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் பல்வேறு துறைகளிலிருந்து 217 அனுமதிகளுக்கு என்ற ஒற்றைச் சாளர இணையதளம் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். இதில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தமிழ்நாடு வணிக வசதிச் சட்டம் - விதிகள், 2018இல் குறிப்பிடப்பட்ட கால வரம்புக்குள் பரிசீலிக்கப்பட்டு உரிய ஒப்புதல்கள் வழங்கப்படும். ஒற்றைச் சாளர இணையதளம் 200 க்கும் மேற்பட்ட சேவைகளையும், 30க்கும் மேற்பட்ட அரசுத் துறைகள் மற்றும் முகவர் நிறுவனங்களையும் உள்ளடக்கியுள்ளது.

சேலம் மாவட்டத்தில் மாவட்ட தொழில் மையம் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் தொழில்முனைவோருக்கான பல்வேறு திட்டங்கள் மூலம் 1,928 இளைஞர்கள் மற்றும் தொழில்முனைவோர் பயன்பெறும் வகையில் ரூ.264.48 கோடி கடனுதவியுடன் கூடிய ரூ.77.34 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் திறன் வாய்ந்த படித்த இளைஞர்கள் அதிக அளவில் உள்ள காரணத்தாலும் தொழில் தொடங்க அனைத்து உள்கட்டமைப்பு வசதிகள் இருப்பதாலும் முதலீட்டாளர்கள் தொழில் தொடங்குவதுடன் அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட கலெக்டர் இரா. பிருந்தாதேவி தெரிவித்தார்.

# தூத்துக்குடி கலெக்டர் இளம்பகவத் தலைமையில் திங்கள்கிழமை மக்கள் குறைகளையும் நாள் கூட்டம்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் கலெக்டர் இளம்பகவத் தலைமையில் திங்கள் கிழமை மக்கள் குறைகளையும் நாள் கூட்டம் நடைபெற்றது. பொதுமக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டாமாறுதல் உதவித்தொகை, வரன்முறைப்படுத்தி பட்டா, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுவேண்டி, தொழில் கடனுதவி, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, வேலை வாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 487கோரிக்கை மனுக்கள்பெறப்பட்டது. பெறப்பட்டகோரிக்கை மனுக்கள்மீது உரியநடவடிக்கை மேற்கொள்ளுமாறு துறைசார்ந்த அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தினார்கள்.

முன்னதாக, மாற்றுத்திறனாளிகளை நேரில்சந்தித்து பல்வேறுகோரிக்கைகள் அடங்கிய 25கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டு அவர்களின் கோரிக்கைகளை கனிவுடன் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், தூத்துக்குடி மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ள ஸ்டார் அகாடமிடேக் வாண்டோ விளையாட்டு பயிற்சி மையத்தில் வீரர்வீராங்கனைகளுக்கு பயிற்சி அளிக்க ஏதுவாகடேக் வாண்டோபயிற்சியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள ராம்அரவிந்த் என்பவருக்கு டேக் வாண்டோ பயிற்சியாளருக்கான தற்காலிக பணிநியமன ஆணையை கலெக்டர் இளம்பகவத் வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரவிச்சந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) சேதுராமலிங்கம், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் ஹபிபூர்ரஹ்மான், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சாந்தி, மாவட்ட விளையாட்டு நலஅலுவலர் அந்தோணி அதிஸ்டராஜ், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் பிரம்மநாயகம், துணை ஆட்சியர் (பயிற்சி) சத்யா மற்றும் அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# காஞ்சிபுரம் அடுத்த மேல்கதிப்பூர் கிராமத்தில் தானிய கூடம் கட்டுவதற்கு எம்எல்ஏ எழிலரசன் அடிக்கல் நாட்டினார்



காஞ்சிபுரம் மே 7

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட மேல்கதிர்பூர்கிராமத்தில் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் ரூபாய் 35 லட்சம் மதிப்பீட்டில் புதிய உலர் கலத்துடன் கூடிய தரம் பிரிப்பு கூடத்தை காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சிவிஎம்பி.எழிலரசன் தலைமையில் கட்டுவதற்கான பூமி பூஜை போடப்பட்டு அடிக்கல் நாட்டினார். பின்பு வந்திருந்த அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் ஊராட்சி குழு தலைவர் மலர்கொடிகுமார், ஒன்றிய செயலாளர் பி எம் . கு மா ர், மேல்கதிர்பூர் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.பேபி சேட்டு, துணைத் தலைவர் பிரியா குமரேசன் , நரப்பாக்கம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அருண்குமார், கட்டிட ஒப்பந்தக்காரர் விஜயன் உள்ளிட்ட திமுக கட்சி நிர்வாகிகள், கிராம பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காரைக்குடி சட்டமன்ற தொகுதி காங்கிரஸ் கட்சி சார்பாகாக மாபெரும் மின்னொளி கால்பந்தாட்ட போட்டி




காரைக்குடி சட்டமன்ற தொகுதி காங்கிரஸ் கட்சி சார்பாகாக மாபெரும் மின்னொளி கால்பந்தாட்ட போட்டி நடைபெற்றது இதில் சிறப்பு விருந்தினர்களாக சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப சிதம்பரம் அவர்கள் முதலாவது போட்டியை துவக்கி வைத்தார் கால் இறுதிப் போட்டியை சங்கராபுரம் ஊராட்சி மன்றமுன்னாள்தலைவர் தேவி மாங்குடி அவர்கள் துவக்கி வைத்தார் இறுதிப் போட்டியில் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ் மாங்குடி அவர்கள் போட்டியை துவக்கி வைத்து பரிசுகளை வழங்கினார் இந்தநிகழ்ச்சியில்மாநகர தலைவர் பாண்டி மெய்யப்பன்அவர்களும் மாநகர பொதுச்செயலாளர் கே டி குமரேசன உஞ்சனை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அருணகீதன் அவர்களும் மாவட்ட செயற்குழு உறுப்பினர் சண்முகதாஸ் அவர்களும் மாநகர வர்த்தக காங்கிரஸ் தலைவர் ஜேபி என்ற ஜெயபிரகாஷ் அவர்களும் சாக்கோட்டை வட்டார பொறுப்பாளர் பாலா அவர்களும் மாநகர துணைத் தலைவர் எம் சி டி சிவா அவர்களும் இளைஞர் காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் ஆதி அருணா அவர்களும் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அமுதா அஞ்சலி மற்றும் காங்கிரஸ் முக்கிய நிர்வாகிகள் மனோஜ் அப்துல் காதர் மனச்சை கருப்பையா முகேஷ் கல்லல் பாலு மாத்தூர் காமராஜ் புதுவயல் மீரா இதற்கான ஏற்பாடுகளை காரைக்குடி சட்டமன்ற தொகுதி இளைஞர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கழனிவாசல் பீட்டர் செய்திருந்தார்

# நெல்லையில் குத்துவிளக்கு திருடிய வாலிபர் கைது

திருநெல்வேலி மே.7

நெல்லை மாவட்டம், நாங்குநேரி, பெரும்பத்தை சேர்ந்த பிரேமா (வயது 48) என்பவர் ஒரு வருட காலமாக ஆரல்வாய்மொழியில் உள்ள தனது தாயார் வீட்டில் இருந்து வருகிறார். அவர் 3.5.2025 அன்று பெரும்பத்தில் உள்ள தனது வீட்டிற்கு வந்து பார்த்தபோது,

வீட்டிலிருந்த குத்துவிளக்கை காணவில்லை. இதுகுறித்து பிரேமா நாங்குநேரி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அந்த புகாரின் அடிப்படையில் சப் இன்ஸ்பெக்டர் ஆபிரகாம் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டார். அதில் பெரும்பத்தை சேர்ந்த ஐயப்பன்(22), குத்துவிளக்கை திருடியது தெரியவந்தது. இதனையடுத்து மேற்சொன்ன சப் இன்ஸ்பெக்டர், ஐயப்பனை நேற்று முன்தினம் (4.5.2025) கைது செய்தார். மேலும் அவரிடமிருந்து குத்துவிளக்கை பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்தார்.

# ஜெயிலர் 2 படத்திற்காக மோகன்லாலை நேரில் சந்தித்த நெல்சன்



பிரபல இயக்குனர் நெல்சன் திலீப் குமார். இவர் 'கோலமாவு கோகிலா' என்ற படத்தின்மூலம் இயக்குனராகஅறிமுகமானார். அதனைதொடர்ந்து சிவகார்த்திகேயனின் 'டாக்டர்', விஜய்யின் 'பீஸ்ட்' ஆகிய படங்களை இயக்கி வரவேற்பை பெற்றார். அதனை தொடர்ந்து சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் ரஜினியை வைத்து 'ஜெயிலர்' படத்தை இயக்கினார். இப்படம் ரூ.650 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்து சாதனை படைத்தது.

அதனை தொடர்ந்து தற்போது 'ஜெயிலர்' படத்தின் இரண்டாம் பாகத்தை இயக்கி வருகிறார். இந்த படத்தில் ரஜினியுடன் இணைந்து ரம்யா கிருஷ்ணன், மிர்னா மேனன், யோகி பாபு மற்றும் பலர் நடித்து வருகின்றனர். முதல் பாகத்தை போலவே சிவராஜ்குமார் மற்றும் மோகன்லால் கேமியோ ரோலில் நடிக்க உள்ளதாக கூறப்பட்டது. சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து சிவராஜ்குமார் படத்தில் நடிப்பதை உறுதிசெய்தார்.

அதனை தொடர்ந்து, நடிகர் மோகன்லாலை இயக்குனர் நெல்சன் நேரில் சந்தித்து படப்பிடிப்பு தொடர்பான விஷயங்களை பேசியுள்ளார். இதன் மூலம் மோகன்லால், ஜெயிலர் 2 படத்தில் நடிப்பது கிட்டத்தட்ட உறுதி செய்யப்பட்டுள்ளது. முதல் பாகத்தில் மோகன்லால் 'மேத்யூ' என்ற கதாபாத்திரத்தில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'சிம்பு இல்லைனா இன்னைக்கு நான் இல்லை' சந்தானம்



கோலிவுட்டில் நகைச்சுவை நடிகராக அறிமுகமாகி, இன்று முன்னணி நடிகர்களில் ஒருவராக வளர்ந்திருப்பவர் சந்தானம். இவர் தற்போது 'டிடி நெக்ஸ்ட் லெவல்' என்ற படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படம் வருகிற 16ந் தேதி வெளியாக உள்ளது. ஆர்யாவின் தயாரிப்பில் உருவாகும் இந்த படத்தை பிரேம் ஆனந்த் இயக்கியுள்ளார். இதில் சந்தானத்துடன் இணைந்து கஸ்தூரி, செல்வராகவன், கவுதம் வாசுதேவ் மேனன், மொட்டை ராஜேந்திரன் மற்றும் பலர் நடித்துள்ளனர்.

இந்த நிலையில் இப்படத்தின் புரமோஷன் நிகழ்ச்சி சென்னை ராயப்பேட்டையில் நடைப்பெற்றது. அதில் நடிகர் சிம்பு மற்றும் ஆர்யா கலந்து கொண்டனர். அப்போது பேசிய நடிகர் சந்தானம், இப்போது சினிமாவில் நான் இருக்க காரணம் சிம்பு சார் என்றார். அதாவது, சிம்பு இல்லைனா இன்னைக்கு நான் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

அந்த நிகழ்ச்சியில் சிம்பு குறித்து அவர் கூறியது, "காதல் அழிவதில்லை என்ற படத்தில் கூட்டத்தில் ஒருவனாக நடித்து இருந்தேன். அப்போது என்னை பார்த்த சிம்பு சார் 'மன்மதன்' படத்தில் நடிக்க எனக்கு வாய்ப்பு கொடுத்தார். அந்த படத்தின் முதல் நாள் படப்பிடிப்பின் போது எனக்கு பில்டப் சீன் ஒன்று வைக்க வேண்டும் என்றார். அப்போது திரைகளில் நல்ல கைத்தட்டல் கிடைக்கும் என்று கூறினார். அன்றுமுதல் இன்றுவரை எனக்கு கைத்தட்டல் கிடைக்க வேண்டும் என பல விஷயம் செய்துள்ளார். ஒவ்வொரு நேரமும் எனக்காக மற்றவர்களிடம் பேசுவார். எப்போதுமே அவர் பின்னாடி நான் இருப்பேன்" என சந்தானம் கூறியுள்ளார்.

# 5 நாட்களில் இத்தனை கோடியா?.. ரெட்ரோ பட வசூலின் அதிகாரபூர்வ அறிவிப்பு





தமிழ் சினிமாவின் பிரபல இயக்குனர் கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் சூர்யா நடிப்பில் கடந்த 1ந் தேதி 'ரெட்ரோ' திரைப்படம் வெளியானது. இந்த படத்தில் பூஜா ஹெக்டே கதாநாயகியாக நடித்துள்ளார். மேலும் இவர்களுடன் இணைந்து ஜோஜு ஜார்ஜ், ஜெயராம், கருணாகரன் மற்றும் பலர் நடித்துள்ளனர்.

இந்த படத்தினை ஸ்டோன் பென்ஞ்சு மற்றும் 2டி என்டர்டெயின்மென்ட் நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ளன. காதல், ஆக்சன்கதையில் வெளியான இப்படம் கலவையான விமர்சனங்களை பெற்று வந்தாலும், வசூலில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த நிலையில், இப்படம் வெளியான 5 நாட்களில் உலகளவில் எவ்வளவு வசூல் செய்துள்ளது என்பது குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம் 5 நாட்களில் ரூ.104 கோடி வசூல் செய்துள்ள படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

# ஐபிஎல்: மும்பை குஜராத் ஆட்டம் மழையால் பாதிப்பு




நடப்பு ஐபிஎல் கிரிக்கெட் தொடர் நாட்டின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. அதில் இன்று நடைபெற்று வரும் 56வது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ், குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த மும்பை 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 155 ரன்கள் எடுத்தது.

இதையடுத்து 156 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் குஜராத் விளையாடி வந்தது. 14 ஓவர்கள் முடிவில் குஜராத் 2 விக்கெட்டுகள் இழப்பிற்கு 107 ரன்கள் எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போதிய நிலவரப்படி டக்வொர்த் லூயிஸ் முறைப்படி குஜராத் 8 ரன்கள் முன்னிலையில் உள்ளது. மழையால் ஆட்டம் ரத்து செய்யப்படும் பட்சத்தில் டக்வொர்த் லூயிஸ் முறைப்படி குஜராத் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கேப்டன் பொறுப்பில் இருந்து விலகியது ஏன்? மனம் திறந்த விராட் கோலி

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர் விராட் கோலி (வயது 36). இவர் இந்திய அணிக்காக 123 டெஸ்ட், 302 ஒருநாள் மற்றும் 125 டி20 போட்டிகளில் ஆடி உள்ளார். இந்திய அணிக்காக 82 சதங்களை அடித்து அசத்தி உள்ளார். சீனியர் வீரரான விராட் கடந்த டி20 உலகக்கோப்பையை வென்ற பின்னர் சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து விளையாடி வருகிறார். மேலும், ஐ.பி.எல். தொடரிலும் ஆடி வருகிறார். ஐ.பி.எல். தொடரில் பெங்களூரு அணிக்காக மட்டுமே விளையாடி வரும் விராட் இதுவரை 262 போட்டிகளில் 8447 ரன்கள் குவித்துள்ளார். விராட் கிரிக்கெட் ரசிகர்களால் 'கிங்'என செல்லமாக அழைக்கப்படுகிறார்.

இந்த நிலையில் இந்தியா, ஆர்சிபி கேப்டன்ஷிப் பதவியை ராஜினாமா செய்தது ஏன் என்பது குறித்து விராட் கோலி மவுனம் கலைத்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது;

ஒரு கட்டத்தில், என் வாழ்க்கையில் நிறைய விஷயங்கள் நடந்ததால் அது எனக்கு கடினமாகிவிட்டது. நான் 78 ஆண்டுகள் இந்திய அணிக்கு கேப்டனாக இருந்தேன். ஒன்பது ஆண்டுகள் ஆர்சிபி அணிக்கு கேப்டனாக இருந்தேன். நான் விளையாடிய ஒவ்வொரு ஆட்டத்திலும் பேட்டிங் பார்வையில் என் மீது எதிர்பார்ப்புகள் இருந்தன.

கவனம் என்னை விட்டு விலகியது என்ற உணர்வு எனக்கு இல்லை. கேப்டன் பதவி இல்லையென்றால், பேட்டிங்கில் கவனம் இருக்கும். நான் அதை 24×7 அனுபவித்தேன். அது எனக்கு மிகவும் கடினமாக இருந்தது, இறுதியில் அது மிகையானது. அதனால்தான் நான் ராஜினாமா செய்தேன், ஏனென்றால் நான் இந்த இடத்தில் இருக்க வேண்டும் என்று முடிவு செய்துவிட்டால், நான் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று உணர்ந்தேன்.

மற்ற அணிக்கு சென்று விளையாடினால் கோப்பையை வெல்ல முடியும் என்று என்னிடம் சொன்னார்கள். என்னுடைய கேரியரின் உச்சகட்ட சமயத்தில் வேறு அணிக்கு சென்று விளையாட எனக்கும் வாய்ப்புகள் இருந்தது. 2016 2019 காலங்களில் அந்தப் பரிந்துரைகள் ஏராளமாக வந்தன.

இருப்பினும் இந்தியாவுக்காக எனது கேரியரில் நிறைய வென்றுள்ள நான் ஏராளமான பாராட்டுகளையும் பெற்றுள்ளேன். அதனால் பெங்களூருவை விட்டு வெளியேறி புதிய அணியில் சாதிக்க வேண்டுமா? என்ற முடிவெடுக்க வேண்டியிருந்தது. அது போன்ற சூழ்நிலையில் வேறு அணிகளை விட இத்தனை வருடங்களாக பெங்களூருவுக்கு விளையாடியதால் ரசிகர்களிடம் ஏற்பட்ட உறவு முக்கியம் என்று நினைத்தேன். அதனால் வெற்றி, தோல்வி பரவாயில்லை. இதுவே என்னுடைய வீடு"

இவ்வாறு விராட் கோலி கூறியுள்ளார்.

நடப்பு ஐபிஎல் தொடரில் விராட் கோலி 505 ரன்கள் விளாசி, அதிக ரன்களை அடித்த வீரராக ஆரஞ்சு தொப்பியை தன்வசப்படுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடர்; வெஸ்ட் இண்டீஸ் அணி அறிவிப்பு

வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணி அயர்லாந்து (3 ஒருநாள் மற்றும் 3 டி20) மற்றும் இங்கிலாந்துக்கு (3 ஒருநாள் மற்றும் 3 டி20) சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாட உள்ளது. இந்த தொடர் வரும் 21ம் தேதி தொடங்குகிறது. தற்போது இந்த தொடர்களுக்கான வெஸ்ட் இண்டீஸ் அணி (ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கு மட்டும்) அறிவிக்கப்பட்டிருக்கிறது. தற்போது முக்கியமான சில வெஸ்ட் இண்டீஸ் வீரர்கள் ஐ.பி.எல் தொடரில் விளையாடி வருகிறார்கள். ஆனால், தற்போது ஐ.பி.எல் தொடரில் விளையாடும் எந்த வெஸ்ட் இண்டீஸ் வீரரும் ஒருநாள் கிரிக்கெட் வெஸ்ட் இண்டீஸ் அணியில் இடம்பிடிக்ககூடியவர்களாக இல்லை. எனவே, வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் வாரியம் எதிர்காலஒருநாள்கிரிக்கெட்அணியைஉருவாக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது.

வெஸ்ட் இண்டீஸ் அணி விவரம்: ஷாய் ஹோப் (கேப்டன்), ஜுவல் ஆண்ட்ரூ, கீசி கார்டி, ரோஸ்டன் சேஸ், மேத்யூ போர்டு, ஜஸ்டின் கிரீவ்ஸ், அமீர் ஜாங்கோ, அல்சாரி ஜோசப், ஷமர் ஜோசப், பிரண்டன் கிங், எவின் லூயிஸ், குடகேஷ் மோடி. ஷெர்பேன் ரூதர்போர்டு, ஜெடன் சீல்ஸ், ரொமாரியோ ஷெப்பர்ட்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.